**10-12-2018**

# பத்திரிக்கைச் செய்தி

சென்னை மெட்ரோ இரயில் திட்ட செயலாக்கத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்கள் இன்று (10-12-2018) மாலை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தில் ஆய்வு செய்தார்.

அப்போது சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம் 1இல், குறிப்பாக பயணிகள் சேவை துவங்கப்படவுள்ள ஏஜி-டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான சுரங்கப்பாதையில் நடைபெற்றுவரும் இறுதிகட்ட கட்டுமானப்பணிகள் மற்றும் அமைப்புகளை நிறுவும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார். அனைத்து பணிகளையும் விரைவில் முடிக்குமாறு அறிவுரை வழங்கினார்.

மேலும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-1 நீட்டிப்பு பணியான வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. பங்கஜ் குமார் பன்சல் இ.ஆ.ப, இயக்குநர் (திட்டங்கள்), இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்புகள்), இயக்குநர் (நிதி) மற்றும் தலைமை பொது மேலாளர்கள் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*******************